1969 மார்ச் 10]

THIRU K. VINAYAKAM : Sir, I object to the statement of the hon. Member. The lawyer is permitted to take prescribed fees and then argue his case. It is not considered as bribery. It is considered as "fees". I request you, Sir, to please pull up the hon. Member.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிக்கவேண்டும். சட்ட மன்ற அங்கத்தினர் என்று சொல்வது சரியல்ல. வழக்கு அறிஞர் வாங்குவது—ஆதரைஸ்டு பீஸ் ஆகும்.

திரு. எம். எஸ். மணி : சிபார்சு செய்வதற்காக வாங்குவதும் தவறு தானே. (மணி அடிக்கப்பட்டது).

அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் மாநாடு

* 250 வினா.— **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) N.G.G.O. க்களின் 44-வது மாநாட்டில் எடுத்த முடிவுகள் சர்க்காருக்கு தெரிவிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில் அதன் விவரம் என்ன ?

(உ) அவற்றின் மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் சங்கம் கூட்டிய 44-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் அண்மையில் அரசாங்கத்துக்கு கிடைத்தன.

(இ) and (உ) சம்பந்தப்பட்ட துறைகள் அத்தீர்மானங்கள் குறித்து ஏற்புடைய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சில அதிகாரிகள் பெண் ஊழியர்கள் மீது தவறான முறையில் நடந்துகொண்டார்கள் என்பதாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது போன்ற குற்றச்சாட்டுகளைச் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றியது இந்தக் கேள்வி.

திரு. வி. கே. கோதண்டராமன்: அதைத் தான் சொல்கிறேன். இரகசிய குறிப்பேடுகளில் பெண் ஊழியர்களைப் பற்றி தவறான முறையில் நடந்துகொண்டார்கள் என்று எழுதப்பட்டதன் காரணத்தினால் அவர்களது குடும்பங்களிலே தகராறுகளே ஏற்பட்டிருப்பது தெரியுமா ? ஆகவே 1966-ல் தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழக மகாநாட்டிலேயே இரகசியக் குறிப்பேடுகள் ஒழிக்கப்படும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்களே, அந்த அடிப்படையில் உடனடியாக அதை ஒழிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உடனடியாக ஒழித்துக்கட்டுவதாக இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த இரகசியக் குறிப்பேடுகளைப் பொறுத்த வரையில் உடனடியாக அரசாங்கம் ஒழிப்பதற்குத் தயாராய் இல்லை என்றாலும், மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்யத் தயாரா ? மேலும் என்.ஜி. ஓ க்களுடைய மகாநாட்டில் போடப்பட்ட தீர்மானங்களை முன்பும் முதல் அமைச்சருக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இப்போதும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களது முக்கியமான கோரிக்கைக்கு இணங்க இரண்டாவது பே கமிஷன் நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதல் கேள்வியில் சொன்னபடி இரகசியக் குறிப்பேடுகள் பற்றி மீண்டும் ஒரு முறை பரிசீலிப்பதில் ஆட்சேபணை இல்லை.

இரண்டாவது பே கமிஷன் நியமிப்பது பற்றி—ஐந்தாவது நிதிக் கமிஷன் ரிப்போர்ட்டை எதிர்பார்த்திருக்கிறோம். இப்போதே நாம் நம்முடைய ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர் விகிதங்களில் அலவன்ஸ் போன்றவைகள் கொடுக்கிறோம். இதுபற்றியும் ஐந்தாவது நிதி கமிஷன் அறிவிப்புக்குப் பிறகுதான் இரண்டாவது பே கமிஷன் நியமிப்பதுபற்றி யோசிக்கலாம்.

THIRU T. MARTIN : May I know whether there is any proposal to pay higher house rent allowance and fixed medical allowance to the officers of the State Government by this Government ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இவை எல்லாம் அந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றிரண்டு ஆகும். அவைகளை அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : என்.ஜி.ஒக்களுடைய இரகசியக் குறிப்பேடுகள் பற்றி பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கடந்த ஆண்டு என்.ஜி.ஓ. மகாநாட்டில் தலைமைச் செயலாளர் அவர்கள் அந்த முறை ஒழிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது பாலிசி சம்பந்தப்பட்ட விஷயம். அமைச்சரவையின் அனுமதியுடன் தலைமைச் செயலாளர் அவ்வாறு அறிவித்தாரா? இல்லை என்றால் அப்படி அறிவிப்புச் செய்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதை அவர்கள் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. எம் சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கெஜடெட், நான். கெஜடெட் என்று இரண்டு பிரிவுகளாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே அவர்கள் அதிகாரம் செய்வதற்காக வைக்கப்பட்ட முறை அந்த முறை என்று சொல்லப்படுகிறது. இப்படி இரண்டு விதமாக வைத்திருப்பதால் அரசாங்கத்திற்கு என்ன லாபம்? இரண்டும் ஒரே மாதிரியாக இருந்து அவரவர் பணிகளை அவரவர் செய்யக் கூடிய அளவில் அவர்களைக் கட்டாயப்படுத்திக்கொண்டு கெஜடெட், நான்–கெஜடெட் என்கிற இரு பிரிவுகளை நீக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அப்படிப்பட்ட யோசனையில் எதுவும் அரசாங்கம் ஈடுபடுவதாக இல்லை.

திரு. கே. விநாயகம் : இந்த கான்பிடன்ஷியல் பைல் சிஸ்டம் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அமலில் இருக்கிறது. பாதிக்கப்பட்ட, உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகள் ஒரு ஆப்பர்சூனிடி கொடுத்து, "இந்தத் தவறு செய்திருக்கிறீர்கள், நடவடிக்கை எடுக்கப்போகிறோம்" என்று சொல்லி அதற்குப் பிறகு பார்த்து எழுத வேண்டுமென்று அரசாங்கம் அதிகாரிகளுக்கு உத்திரவு போடுமா ? சீப் செகரடெரி, திரு சி. ஏ. ராமகிருஷ்ணன் அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷனிலே தன்னுடைய அபிப்பிராயத்தைத்தான் சொன்னார், அரசாங்கத்தினுடைய அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சீப் செகரட்டரி சொன்னது பற்றி விசாரித்து அறிய வேண்டுமென்று அப்போதே சொன்னேன். இந்த இரகசியக் குறிப்பு எழுதுவதற்கு முன்பு முன்னெச்சரிக்கையாகச் சொல்லப்படுமா என்று கேட்டார்கள். அப்படிச் சொல்லப்படுமானால் திடீர்

மாற்றங்கள் என்ன ஏற்படும் என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எழுதப்பட்ட பிறகு அப்பீல் செய்துகொள்வதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு விநாயகம் அவர்களுக்காக ஒன்று சொல்கிறேன். நம்முடைய தீர்ப்பிலே Members should put short questions to enable the Minister to remember all the points contained in them and answer them என்று இருக்கிறது. எனவே, கேள்விகளைச் சுருக்கமாகப் போட வேண்டும்.

திரு. கே. விநாயகம் : என்னை ஆங்கிலத்திலே போடச் சொல்லுங்கள். ஷார்ட் ஆகப் போடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆங்கிலத்திலே போடுங்கள், போட வேண்டாமென்று நான் ரூலிங் கொடுக்கவில்லையே. என்ன, என்ன கேட்க வேண்டுமென்பதைச் சுருக்கமாகச் சொன்னால் தான் முதலமைச்சர் மனதில் வைத்துக்கொண்டு பதில் சொல்ல முடியும்.

திரு. கே. விநாயகம் : அவர்கள் என்னைவிட கெட்டிக்காரர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஐந்தாவது நிதிக் கமிஷன் வந்த பிறகு இரண்டாவது பே கமிஷன் வைப்பதாகச் சொன்னார்கள். அது வருடக் கணக்கில் ஆகும். டெய்லி அலவன்ஸைப் பொறுத்தவரையில் ஒரு நாளைக்குப் பழைய காலத்தில் இருந்த நிலையிலேயே ஒரு ரூபாய், ஒன்றே கால் ரூபாய் என்ற அளவுக்குத்தான் இன்னும் கொடுக்கிறார்கள். ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே 2 ரூபாய் 3 ரூபாய் ஆகிவிடுகிறது. இப்படி ஒன்றேகால் ரூபாய் என்று குறைவாக வழங்குவதால்தான் லஞ்ச ஊழல் ஏற்படுகிறது. ஆகவே உடனடியாக டெய்லி அலவன்ஸையாவது உயர்த்தக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நிதிக் குழு பற்றிச் சொல்லும் பொழுது பல ஆண்டு காலம் ஆகும் என்று சொன்னார்கள், அப்படியொன்றும் இல்லை, அடுத்த ஜூலை மாதத்திலே வரலாம். அப்படியொன்றும் பரிசிலனையில் தற்பொழுது இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோவை நகரில் தீ விபத்து

* 251 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1968-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோவை நகரில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம். கோயம்புத்தூர் நகர் ராம்நகருக்கு அருகேயுள்ள ரங்கநாதபுரத்தில் 4-6-1968 அன்று பகல் 1-45 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டது.

(இ) மேற்படி தீ விபத்தில் 130 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அப்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட உதவித் தொகை என்ன ? வீடு இழந்தவர்களுக்கு தீப் பிடிக்காமல் இருக்கக் கூடிய வீடுகளை அரசாங்கம் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடிசைகளைக் கட்டிக்கொள்வதற்காக ரூ. 8,850 அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.